தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 165/ந/2023
நாள் 23.12.2023

திரு.ரா.மோகன்,
பொள்ளாச்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
பொள்ளாச்சி நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஜோதிநகர் மாக்கினாம்பட்டி சாலை, விஜபி கார்டன், எண்.71 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ரா.மோகன் என்பவரின் 05.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.06.2023 அன்று பெறப்பட்டு 165/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஜோதிநகர் மாக்கினாம்பட்டி சாலை, விஜபி கார்டன், எண்.71 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ரா.மோகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“பொள்ளாச்சி 36வது வார்டு விஜபி கார்டன் பகுதியில் தெருவிளக்கு வசதி மற்றும் புதிய குடிநீர் இணைப்பு சேவை தொடர்பான பிரச்சனைக்கு கடந்த ஆண்டு ஜூலை 2022 முதல் காத்திருக்கிறோம்.

பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட விஜபி கார்டனில் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் முறையாக சொத்து வரி செலுத்தி வருகின்றோம். ஆனால் 2018 ஆம் வருடம் முதல் தெருவிளக்கு வசதி இல்லை. நகராட்சியிலிருந்து நகரமைப்பு அலுவலர்கள் மற்றும் வருவாய் அலுவலர்கள், கட்டட அனுமதி வழங்குதல் மற்றும் வரி விதிப்பு செய்தல் போன்ற பணிகளை கடந்த 2018 ஆம் வருடம்முதல் நகராட்சியில் செய்துள்ளனர்.

நகராட்சி ஆணையாளருக்கு தெருவிளக்கு ஒளிர 27.09.2022 அன்று கோரிக்கை மனு பதிவு தபாலில் அனுப்பப்பட்டது. 21 தெரு விளக்குகள் உள்ள பகுதியில், 18.10.2022 அன்று 6 தெருவிளக்குகள் மட்டுமே பொருத்தி தந்தனர். ஒரிரு மாதத்தில் மீதமுள்ள தெருவிளக்குகளையும் பொருத்தித் தருவதாக உறுதியளித்தனர். ஆனால் மீதமுள்ள தெருவிளக்குகள் பொருத்தப்படாததால் நகராட்சி ஆணையாளருக்கு தெருவிளக்கு பொருத்தி தருவது தொடர்பாக புகார் மனு வழங்கியும் இன்றைய தேதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பணி ஆணை, ஒப்பந்ததாரிடம் வழங்கப்பட்டுள்ளது என்று கடந்த இரண்டு மாதங்களாக கூறிவருகின்றனர். தெருவிளக்கு இல்லாததால் விஐபி கார்டன் குடியிருப்போருக்கு மாலை மற்றும் இரவு நேரங்களில் விஷ ஜந்துக்களால் சாலையில் நடப்பதற்கு சிரமமாகவும் மற்றும் சமூக விரோத செயல்கள் நடைபெற ஏதுவாகவும் உள்ளது.

புதிய குடிநீர் இணைப்பிற்கு கடந்த ஆண்டு ஜூலை மாதம் 07.07.2022 அன்று விண்ணப்பித்தோம். பகிர்மான குழாய் இல்லாததால் 9 மாதங்களுக்கு பிறகு ஏப்ரல் 2023 விஐபி கார்டனுக்கு பகிர்மான குழாய் பதித்தனர். அதன் பிறகு இன்று வரை நகராட்சியிலிருந்து பிளம்பர்கள் புதிய குடிநீர் இணைப்பு சம்பந்தமாக அணுகவில்லை. மேலும் நகராட்சியிலிருந்து புதிய குடிநீர் இணைப்பிற்கு விண்ணப்பித்தவர்களிடம் வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணம் செலுத்துவது தொடர்பாக எவ்வித கேட்பு அறிவிப்பும் வரவில்லை.

தமிழ்நாடு அரசாணை நிலை எண். 97 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.07.2007–ன்படி விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்த 7 நாட்களுக்குள் குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும். மேலும் அரசாணையின்படி தொழில்நுட்ப காரணங்களினால் குடிநீர் இணைப்புகள் வழங்க முடியாத தெருக்கள் / பகுதிகளில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் தொழில் நுட்ப காரணங்கள் சரிசெய்யப்பட்டு விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற அரசாணையின்படியும் செயல்படாமல் உள்ளனர்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் தனது 06.12.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.36–ல் புதிதாக அமைக்கப்பட்ட VIP கார்டன் பகுதிக்கு 21 தெருவிளக்குகள் அமைத்து தரப்படும என நகராட்சியால் தெரிவிக்கப்பட்ட நிலையில், 27.09.2022 அன்று 6 தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி பகுதியில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பான இடங்களில் 02.11.2023–ம் தேதியன்று கூடுதலாக 7 எண்ணிக்கை தெருவிளக்குகள் மனுதாரரின் முன்னிலையில் பொருத்தப்பட்டது. மீதமுள்ள 8 எண்ணிக்கை தெருவிளக்குகள் முழு அளவு குடியிருப்பு ஆன பின் அமைத்து தரப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி VIP கார்டன் பகுதியில் புதிய குடிநீர் இணைப்பு வேண்டி திருவாளர்கள் 1.அபிமன்யு, 2.மணிகண்டன், 3.ராதாகிருஷ்ணன், திருமதி. 4.சரண்யா மற்றும் 5.தீபா ஆகிய ஐந்து நபர்கள் விண்ணப்பித்திருந்தார்கள் அவர்களில் 1.அபிமன்யு, 2.மணிகண்டன், 3.ராதாகிருஷ்ணன், திருமதி. 4.சரண்யா ஆகிய நான்கு நபர்களாலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை மற்றும் இதர தொகை செலுத்தப்பட்டதால் 1.அபிமன்யு,

2.மணிகண்டன், 3.ராதாகிருஷ்ணன் ஆகிய மூன்று நபர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. திருமதி. சரண்யா என்பவருக்கு பணி உத்தரவு கணினியில் வராதது குறித்து நகராட்சி நிர்வாக அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. புதிய குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ள திருமதி.தீபா என்பவர் தற்பொழுது குடிநீர் இணைப்பு பெறப்படும் நிலையில் இல்லை என அலைபேசியில் தகவல் தெரிவித்துள்ளார்.

மேற்படி VIP கார்டன் பகுதியில் புதிய குடிநீர் விநியோகிப்பதற்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் 80 அடி சாலை, கிழக்கிலிருந்து VIP கார்டன் பகுதியின் நுழைவுவாயில் வரை பகிர்மான குழாய் அமைத்து அப்பகுதியில் ஏற்கனவே பதிக்கப்பட்ட பகிர்மான குழாயுடன் இணைக்கப்பட்டது. புதிதாக பதிக்கப்பட்ட பகிர்மான குழாயில் பரிசோதனையாக குடிநீர் விநியோகித்து பார்க்கப்பட்டது. ஆனால், லே அவுட் அனுமதி பெற்றவரால் ஏற்கனவே பதிக்கப்பட்ட குழாய்களில் பெரும் பகுதி புதிதாக வீடு கட்டுமான பணி மேற்கொள்பவர்களால் சேதப்படுத்தப்பட்டது தெரியவந்தது. இதனால், மேற்படி VIP கார்டன் பகுதிக்கு குடிநீர் விநியோகிக்க இயலவில்லை. தற்பொழுது ரூ.1.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு VIP கார்டன் உட்புறம் சேதமடைந்த பகிர்மான குழாய்களை மாற்றி புதிதாக பகிர்மான குழாய் அமைப்பதற்கு 12.12.2023–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி முடித்த பிறகு மேற்படி நான்கு நபர்களுக்கும் புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரும் 07.12.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு.ரா.மோகன், 27.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஜோதிநகர், மாக்கினாம்பட்டி சாலை விஐபி கார்டனில் சுமார் 89 மனைகளில், 35 மனைகளில் நாங்கள் வீடுகளைக் கட்டி கடந்த 2018 முதல் வசித்து வருகிறோம். முறையாக சொத்து வரி செலுத்தி வரும் எங்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு மற்றும் தெருவிளக்கு வசதிகளை அளித்திட நகராட்சியில் மனு அளித்திருந்தோம். அங்கு பொருத்தப்பட்டுள்ள 21 தெரு விளக்கு கம்பங்களில், 6 தெருவிளக்குகளை மட்டுமே 18.10.2022 அன்று பொருத்தியுள்ளனர். மேலும் மீதமுள்ள விளக்குகளையும் ஓரிரு மாதத்தில் பொருத்தித் தருவதாக நகராட்சியினர் உறுதியளித்திருந்தனர். ஆனால் ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னும் பொருத்தவில்லை.

மேலும் புதிய குடிநீர் இணைப்பிற்கு கடந்த 7.7.2022 அன்று விண்ணப்பம் செய்திருந்தோம். பகிர்மானக் குழாய் இல்லாததால் 9 மாதங்களுக்குப் பின்னர் ஏப்ரல் 2023ல் எங்கள் இடத்தில் பகிர்மானக் குழாயை பதித்தனர். ஆனால் இன்னும் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை. இது குறித்து நகராட்சியினரை அணுகி கேட்டபோது குடிநீர் இணைப்பிற்கு விண்ணப்பித்தவர்களுக்கு விண்ணப்ப எண் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என தெரிவித்துள்ளனர். அரசாணையின்படி விண்ணப்பம் அளித்த குறிப்பிட்ட நாட்களுக்குள் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும். ஆனால் இதுவரை குடிநீர் இணைப்பு மேற்கண்ட வி ஐ பி கார்டனில் வழங்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட எங்களது குடியிருப்புப் பகுதியில், தெரு விளக்கு வசதியையும், குடிநீர் இணைப்பையும் நகராட்சினர் உடன் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், 09.11.2023 நாளிட்ட எனது மனுவில் உள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் சார்பாக மின் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் திரு. மு. கணேசன் என்பவர் 27.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள, கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண் 36ல் புதிதாக அமைக்கப்பட்ட வி ஐ பி கார்டன் பகுதியில் தெருவிளக்குகள் 21 எண்ணிக்கையில் அமைத்து தரப்படும் என கூறியதற்கேற்ப தற்போதுவரை 13 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட வி ஐ பி கார்டன் முழு அளவு குடியிருப்பானவுடன் மீதமுள்ள தெருவிளக்குகள் பொருத்தப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட வி ஐ பி கார்டன் பகுதியில் புதிய குடிநீர் இணைப்பு வேண்டி மனுதாரரின் தந்தை உட்பட 5 பேர் விண்ணப்பம் அளித்திருந்தனர். இதில் மனுதாரரின் தந்தை மற்றும் 3 பேர் குடிநீர் இணைப்பிற்கான தொகையை செலுத்திவிட்டனர். ஒருவர் குடிநீர் இணைப்புக் கட்டணம் செலுத்தவில்லை. எனவே மேற்கண்ட ஒருவரை தவிர்த்து மற்ற 4 பேருக்கும் ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்டுவிட்டது என தெரிவித்து அவற்றின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்கண்ட இடத்தில் பகிர்மானக் குழாயில் ஏற்பட்டுள்ள பழுது 13.12.2023ல் பழுதுபார்ப்பு வேலை துவங்கப்பட்டு, இம்மாத முடிவில் குடிநீர் இணைப்பிற்கு தொகை செலுத்திய மேற்கண்ட 4 பேருக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) மனுதாரர் சமர்ப்பித்துள்ள புகார் மனு குறித்து மேல்விசாரணை மேற்கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அதன்படி திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரும் மற்றும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரும் 11.12.2023 அன்று மேல்விசாரணைக்கு அறிக்கையுடன் ஆஜராகுமாறு 07.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(7) பொள்ளாட்சி நகராட்சி ஆணையர் தனது 11.12.2023 நாளிட்ட அறிக்கையில், ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 06.12.2023 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களையே அளித்துள்ளார்.

(8) திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரான திரு.மா.இளங்கோவன் என்பவரும் மற்றும் பொள்ளாட்சி நகராட்சி ஆணையாளரான திரு.கா.சுப்பையா என்பவரும் 11.12.2023 அன்று நடைபெற்ற மேல்விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி மாக்கினாம்பட்டி சாலை, ஜோதி நகர் வி ஐ பி கார்டனில் வீடுகள் அமைந்துள்ள பகுதியில் 21 தெருவிளக்குகள் அமைத்திட நிர்ணயம் செய்யப்பட்டு, தற்போது குடியிருக்கும் பகுதிகளில்

13 தெருவிளக்குகள் குடியிருப்புகளின் அருகே பொருத்தப்பட்டுவிட்டன. அவற்றின் புகைப்படங்களை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறோம். மேலும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மீதமுள்ள தெருவிளக்குகள் மேற்கண்ட வி ஐ பி கார்டனில் மேலும் குடியிருப்புவாசிகள் குடியேறும்போது அமைக்கப்படும். அதே போன்று மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் பகிர்மானக் குழாய்கள் பல இடங்களில் சேதமடைந்து குடிநீர் கசிவு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட பழுதினை சரிசெய்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 12.12.2023 ல் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, அன்றைய தினமே பணி ஆணை ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டு, 31.12.2023க்குள் குடிநீர் இணைப்பு மேற்கண்ட பகுதியில் வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி மின் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியைச் சார்ந்த மனுதாரர் திரு. ரா. மோகன் என்பவர் தனது 05.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 36–வது வார்டில் அமைந்துள்ள விஐபி கார்டன் பகுதியில் தெருவிளக்குகள் மற்றும் புதியகுடிநீர் இணைப்புகள் வழங்கப்படாதது குறித்து புகார் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.–36ல் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவான விஐபி கார்டனில் தெருவிளக்கு வசதி மற்றும் புதிய குடிநீர் குழாய் இணைப்பு கோரி ஜூலை 2022 ஆம் ஆண்டில் குடியிருப்புதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர். தற்போதுவரை 89 மனைகள் அமைந்துள்ள இம்மனைப் பிரிவில், 35 வீடுகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு புதிதாக 21 தெருவிளக்குகள் அமைக்க நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு, முதல்கட்டமாக 07.09.2022 அன்று 6 தெருவிளக்குகளும் அதனைத் தொடர்ந்து 02.11.2023 அன்று 7 தெருவிளக்குகள் என மொத்தம் 13 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது ஆணையரின் அறிக்கை மூலம் தெரியவருகிறது. தெருவிளக்குகள் அமைத்ததற்கான புகைப்படங்களையும் சமர்ப்பித்துள்ளார். எஞ்சியுள்ள 8 தெருவிளக்குகளை புதிதாக குடியிருப்புகள் கட்டியவுடன் உடனுக்குடன் அமைக்கப்படும் என்பதையும் ஆணையரின் அறிக்கை மூலம் தெரியவருகிறது.

மேலும் விஜபி கார்டனில் புதிதாக குடியேறிய வீடுகளுக்கு குடிநீர் வழங்க மனைப்பிரிவு உரிமையாளரால் பதித்த பகிர்மான குழாயானது பழுதடைந்து நீர்கசிவு ஏற்பட்டதன் காரணமாக, புதிதாக ரூ.1.20 இலட்சம் மதிப்புள்ள 400 மீட்டர் தூரத்திற்கு குடிநீர் விநியோகக் குழாயினை அமைக்க 12.12.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, 31.12.2023–க்குள் குடிநீர் வழங்கக் கோரிய வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் என்பது நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தின் வாயிலாக தெரிய வருகிறது. இந்நிலையில், பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளரின் அறிக்கையை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

நகராட்சி ஆணையாளர் மேற்படி இடத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்ட நடவடிக்கையின் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு பொள்ளச்சி நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும், வருங்காலங்களில், இரவு நேரங்களில் சமூகவிரோதிகளாலும் மற்றும் விஷஜந்துக்கள் மூலம் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படா வண்ணம், விஜபி கார்டன் வாழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் வீடுகள் அமைக்கப்பட்டதும் புதிய தெருவிளக்குகள் உடனுக்குடன் அமைக்கப்படவேண்டும். அதேப் போன்று வாழ்வதாரத்திற்கு மிகவும் அவசியமான குடிநீர் இணைப்புகள் வழங்குவதிலும் பொதுமக்களிடமிருந்து எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில் குடியிருப்புதாரர்கள் குடிநீர் இணைப்புகள் கோரியவுடன் இணைப்பு வழங்க துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும், இதில் எவ்வித காலதாமதமோ மற்றும் சுணக்கமோ இல்லாமல் உடனுக்குடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ரா. மோகன்,
71, வி ஜ பி கார்டன்,
ஜோதிநகர் மாக்கினாம்பட்டி சாலை,
பொள்ளாச்சி – 642 003,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2) ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருப்பூர்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5 ) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
24/12/23